DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Calendar Case No | .. | **CC 824 /2025** | | | | |
| Deposition of Witness for | | PW 2 (LW3) | | | | |
| | | Prosecution Side Witness | | | | |
| | | Court | | | | |
| Name | : | **திருமதி.பூர்ணிமா** | Taluk | : | தலைவாசல் | |
| Father/Husband Name | : | **க.பெ.திரு. ரவீச்சந்திரன்** | Calling | : | காவல் ஆய்வாளர் | |
| Village | : | தலைவாசல் காவல் நிலையம் | Age | | 43 | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22.07 2026. துவக்க நேரம் 06.00**

**எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்சமயம் தலைவாசல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆத்துார் ஊரக காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது கடந்த 10.04.2025 அன்று மதியம் 01.00 மணியளவில் நானும், எனது தலைமையில் என்னுடன் தலைமைக்காவலர்கள் திரு. வேல்முருகன் மற்றும் திருமதி. சித்ரா ஆகியோர்களுடன் மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆத்துார் ஊரக காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கல்பகனுர் மாரியம்மன் கோயில் முன்பு கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் அஞ்சலம் க.பெ மதியழகன் என்று

கூறினார். பின்னர் எதிரி அவரிடமிருந்த செய்த சுமார் 180 மிலி அளவுள்ள Black pearl BRANDY – 13 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி அஞ்சலம் என்பவரை அன்றைய தினமே கைது செய்தேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 180 மிலி அளவுள்ள Black pearl BRANDY – 13 பாட்டில்களை அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை யாருக்கும் பயன்படா வண்ணம் மேற்படி போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலேயே கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். (**அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண்.134/2025 சட்டப்பிரிவு 4(1)(C) of TNP (Amendment) Act 2024–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மையென தெரியவந்ததால் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு வழக்கு விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1) நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் வசிப்பிட பகுதி என்றால் தூரதூரமாக வீடுகள் உள்ளன. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தான பாட்டில்களை எதிரி எதில் வைத்திருந்தார் என்றால் சாக்குபையில் வைத்திருந்தார். சாக்கு பையை கைப்பற்றுதல் மகஜரில் காட்டியுள்ளோமா என்றால் இல்லை. பாட்டில்களை அழிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. சாக்கு பையை கைப்பற்றியதாக

அழித்தல் மகஜரில் காட்டியுள்ளோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினோமா என்றால் இல்லை.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் பாட்டில்களை, அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, தோராயமாக கூறியுள்ளோம். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை அழிக்க எனக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

3) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**முடிவு நேரம் 06.10**

| Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct |
| --- |
| N MOHANASUNDARAM Digitally signed by N MOHANASUNDARAM Date: 2026.07.22 17:08:11 +0530<br>Judicial Magistrate No.1(FAC),<br>Attur. |